**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 23.06.2025.**

| Name : மதியழகன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கரட்டுப்பட்டியில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்கிறேன். எனது முதல் மனைவி மாதேஷ்வரி குழந்தை இல்லாததால் என்னை விட்டுவிட்டு அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார். பிறகு நான் குணவதி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து எங்களுக்கு சாருலதா என்ற பெண் உள்ளார். தற்போது 9ம் வகுப்பு S.R.V பள்ளியில் படித்து வருகிறார். எங்கள் வீட்டிற்கு போகும் வழியில் தங்கவேல் என்பவர் வசித்து வருகிறார். கடந்த 2024ம் ஆண்டு முதல் தங்கவேல் என்பவர் என் மகளை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்.

2) எனது மனைவியிடம் போன் செய்து திருமணம் செய்து வைக்க வற்புறுத்தினார்கள். எனது மகளை திருமணம் செய்து வைக்க தங்கவேல், யமுனா, அலமேலு, தங்கபொண்ணு ஆகியோர் அடிக்கடி கேட்டு வந்தார்கள். நான் செய்து கொடுக்கவில்லை. சம்பவம் நடப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பாக என் மகளுடன் என் மனைவி சென்ற போது அங்கும் திருமணம் செய்து வைக்க கேட்டார்கள். என் மனைவி இதன் காரணமாக கடந்த 12.11.2024ம் தேதி கலைக்கொள்ளி மருந்து குடித்து இறந்து போய் விட்டார்.

3) இதை வெளியில் சொன்னால் பிரச்சனை வரும் என்பதால் பயந்து என் மனைவி தற்கொலை செய்து கொண்டார். இது சம்மந்தமாக மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 04.01.2025ம் தேதி எனது மகளை திருமணம் செய்ய பள்ளிக்கு சென்று வரும் போது வற்புறுத்தி வந்ததாகவும் இதனால் எனது மனைவி மருந்து குடித்து இறந்துவிட்டதாகவும் புகார் கொடுத்தேன். பிறகு எங்களை விசாரித்தார்கள். எனது மனைவி இறந்த பிறகு எனது மகள் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் மனு ஒன்றை கொடுத்தார்.

4) சம்பவம் நடந்து 10 நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். எனது முதல் மனைவி மாதேஷ்வரி எனது வீட்டிற்கு வந்து என் மகளுடன் வாழ்ந்து வருகிறார். கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு நான், என் மனைவி, என் மகளுடன் இருந்த போது தங்கவேலு, யமுனா, அலமேலு, ரித்திக், முனுசாமி ஆகியோர் கெட்ட வார்த்தையால் கண்டார ஒலி தெவிடியா என்று சொல்லி என் மகளை திருமணம் செய்யாமல் விடமாட்டேன் என மிரட்டினார்கள்.

5) என் வாயில் தங்கவேல் கையால் குத்தினார். தலைமேல் அடித்து குரவலையை பிடித்து கீழே தள்ளி வலது கால் , வலது தோள் பட்டை அடித்ததில் முழங்கையில் காயம் ஏற்பட்டது. யமுனா என்பவர் என்னை இடுப்பில் எட்டி உதைத்து காயம் ஏற்படுத்தினார். அலமேலு முதுகில் கையால் குத்தினார். எனது மகள் இதனை விலக்கும் போது அவளையும் முடியை பிடித்து யமுனா சுவற்றில் முட்டி தள்ளினார். தங்கவேல் என்பவர் காலால் எட்டி உதைத்தார். ரித்திக் என்பவர் கட்டையால் தலையில் பலமாக அடித்தார். முனுசாமி என் மனைவி மாதேஷ்வரியை வயிற்று பகுதியில் அடித்தார்.

6) பிறகு நாங்கள் அனைவரும் ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தோம். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்

அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.5** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் என்னையும் என் மகளையும், மனைவியையும் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அ டையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 23.06.2025.**

| | |
|---|---|
| **Name : மாதேஷ்வரி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பனங்காட்டில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். நான் என் கணவரை விட்டு குழந்தை இல்லாததால் என் தாயார் வீட்டிற்கு கடந்த 2007ம் வருடம் சென்றுவிட்டேன். பிறகு என் கணவர் குணவதி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து அவர்களுக்கு சாருலதா என்ற பெண் உள்ளார். தற்போது 10ம் வகுப்பு S.R.V பள்ளியில் படித்து வருகிறது. எங்கள் வீட்டை தாண்டி செல்லும் வழியில் தங்கவேல் என்பவர் வசித்து வருகிறார். கடந்த 2024ம் ஆண்டு முதல் தங்கவேல் என்பவர் என் மகளை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்.

2) தங்கவேல், யமுனா, அலமேலு, தங்கபொண்ணு ஆகியோர் குணவதியிடம் அடிக்கடி கேட்டு வந்ததாக சொன்னார்கள். குணவதி என்பவர் இதன் காரணமாக கலைக்கொள்ளி மருந்து குடித்து இறந்து போய் விட்டார்.

3) இது சம்மந்தமாக என் கணவர் மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் திருமணம் செய்ய பள்ளிக்கு சென்று வரும் போது வற்புறுத்தி வந்ததாகவும் இதனால் குணவதி மருந்து குடித்து இறந்துவிட்டதாகவும் சொல்லி புகார் கொடுத்ததாக சொன்னார்.

4) சாருலதா சேலத்தில் உள்ள நீதிமன்றத்தில் இந்த பிரச்சனை சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லி புகார் மனு கொடுத்தார். நான் தற்போது என் கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன். கடந்த 24ம் தேதி 2025ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு நான், என் கணவர், சாருலதா இருந்த போது தங்கவேலு, யமுனா, அலமேலு, ரித்திக், முனுசாமி ஆகியோர் கெட்ட வார்த்தையால் கண்டார ஒலி தெவிடியா என்று சொல்லி நீ புகார் கொடுத்தால் பெரிய ஆளா என்று சொல்லி திட்டினார்கள்.

5) என் கணவரை தங்கவேலு என்பவர் வீட்டிலிருந்து வெளியே இழுத்து வந்து எட்டி உதைத்து குரவளையை நசுக்கி ஏறி உட்கார்ந்து கொண்டார். தடுக்க சென்ற என்னை தங்கவேலு வயிற்றின் மீது எட்டி உதைத்தார். என் வலது கன்னத்தில் காயம் ஏற்படுத்தினார். என் கணவரை யமுனா, தங்கவேலு, அலமேலு, முனுசாமி ஆகியோரும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள்.

6) பிறகு நாங்கள் அனைவரும் ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தோம். ஆஜர் எதிரிகள் தான் என்னையும் என் மகளையும், கணவரையும் அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 23.06.2025.**

| | |
|---|---|
| **Name : சேகர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஆத்தூர் நகர போக்குவரத்து பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2025ம் வருடம் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக வேலை செய்து வந்தேன். கடந்த 03.02.2025–ம் தேதி மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் சீனிவாசன் உத்தரவின் பேரில் நான் மருத்துவமனை சென்று மதியழகன் வயது 53 த/பெ சின்னன்னன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அப்போது அவருடைய மனைவி மாதேஷ்வரி மற்றும் அவரது மகள் சாருலதா மூவரும் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தார்கள். நான் மூவரையும் விசாரித்து விட்டு மதியழகனிடம் மாலை 5 மணிக்கு வாக்குமூலம் பெற்றேன். பின்னர் நிலையம் வந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் வசம் மாலை 7 மணிக்கு ஒப்படைத்தேன். பின்னர் விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 23.06.2025.**

| | |
|---|---|
| **Name : சதாசிவம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பள்ளிப்பட்டி தட்டானூரில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.5 யை எனக்கு தெரியும். அவருக்கு ஒரு பெண் மகள் உள்ளார். கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு அ.சா.5, அ.சா.6 மற்றும் அவருடைய மகள் சாருலதாவுடன் இருந்த போது மதியழகன் என்பவர் தங்கவேலு மனைவியிடம் ஏதோ தவறாக பேசிவிட்டார். அதை கேட்ட போது தங்கவேலு என்பவர் மதியழகன் வீட்டிற்கு சென்று ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டார். இரு தரப்பிலும் சண்டை போட்டார்கள்.

2) நான் இருதரப்பையும் சமாதானம் பேசி அனுப்பி வைத்தேன். பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) மதியழகன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் உள்ளார்கள் என்றால் ஆமாம். அதில் ஒரு மனைவி இறந்துவிட்டார். அவருடைய பெயர் எனக்கு தெரியாது. அவருடைய மனைவிக்கு பெண் குழந்தை உள்ளது. அந்த மனைவி மருந்து குடித்து இறந்துவிட்டார் என்றால் ஆமாம். குடும்ப பிரச்சனை சம்மந்தமாக இறந்துவிட்டார். எனக்கு என்ன பிரச்சனை என்று தெரியாது. தங்கவேலு என்பவர் சாருலதா என்ற தங்கவேலு மகளை திருமணம் செய்ய வற்புறுத்தினாரா என்றால் இல்லை.

4) தங்கவேலு என்பவர் தொடர்ச்சியாக பள்ளிக்கு செல்லும் போது அந்த பெண்ணை திருமணம் செய்ய கேட்டு வற்புறுத்தினாரா என்றால் இல்லை. அவருடைய மனைவி இறந்ததற்கு காரணம் இந்த பிரச்சனை தான் என்றால் இல்லை. கடந்த 04.01.2025ம் தேதி மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

5) மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் மதியழகன் புகார் கொடுத்து அதன் பேரில் விசாரிக்கப்பட்டது என்றால் ஆமாம். கடந்த 02.02.2025ம் தேதி மாலை 4 மணிக்கு மதியழகன், அவர் மனைவி, சாருலதா இருந்த போது எதிரிகள் தங்கவேலு, யமுனா, முனுசாமி ஆகியோர் வந்து கெட்ட வார்த்தையால் திட்டினாரா என்றால் இல்லை. தங்கவேலு, யமுனா, முனுசாமி ஆகியோர் மதியழகனை அடித்தார்களா என்றால் இல்லை. இதனால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. தங்கவேலு என்பவரை தான் அடித்தார்.

6) மாதேஷ்வரி என்பவரை எதிரிகள் அடித்தார்களா என்றால் இல்லை. அப்போது சாருலதா அடிதடியை விலக்கினாரா என்றால் அந்த பெண் அந்த இடத்தில் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.